# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 05.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 1630/SCIC/2023**

திரு ஆ. சுப்பிரமணியன் புகார்தாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம், ... பொது அதிகார அமைப்பு
வள்ளியூர், திருநெல்வேலி மாவட்டம்.

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 24.12.2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், சார்பதிவாளர் அலுவலகம், வள்ளியூர் என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். திருநெல்வேலி மாவட்டம் வடக்கு வள்ளியூர் பஞ்சாயத்திற்குட்பட்ட சர்வே எண்.2187/14 வீட்டுமனை நத்தம் நிலம் தொடர்பாக 10 இனங்களில் தகவல்கள் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. மனுதாரர் 25.01.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அதனையடுத்து மனுதாரர் 28.04.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 18(1)ன் கீழ் புகார் மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம்

CP 1630/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன புகார் மனு குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 12.11.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். மனுதாரர் 06.12.2024 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த புகார் மனுவின்மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 05.06.2025 தேதியிட்ட காணொளிக் காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாக ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வாயிலாக நடைபெற்ற காணொளிக் காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு பா. ஆபாஸ்வினோத்பால், பொதுத் தகவல் அலுவலர் / உதவியாளர், சார்பதிவாளர் (பொ), சார்பதிவாளர் அலுவலகம், வள்ளியூர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. இவ்வழக்கில் மனுதாரர் கோரிய பொருள் தொடர்பாக அவரது இரண்டாம் மேல்முறையீட்டு மனு எண் SA 3731/2023 என்ற வழக்கானது 04.03.2025 அன்று ஆணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வழக்கிற்கு ஆணையத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் மனுதாரர் கோரிய அனைத்து தகவல்களும் 14.03.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக அவருக்கு வழங்கப்பட்டதன் அடிப்படையில் 16.04.2025 தேதியன்று வழக்கானது முற்றாக்கம் செய்து ஆணையத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

5. எனவே, மனுதாரரின் இந்த புகார் மனுவிற்கான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது ஏற்கனவே ஆணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், **இப்புகார் மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**வழக்கு எண். CP 1630/SCIC/2023**

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
வள்ளியூர், திருநெல்வேலி மாவட்டம்

**மனுதாரர்:-**
திரு ஆ. சுப்பிரமணியன்,
த/பெ ஆயிரத்தான்,
26/A1 யாதவர் தெற்கு புதுத்தெரு,
வள்ளியூர் 627 117
திருநெல்வேலி மாவட்டம்.

Copy to: File TK/PS